www.StudyGuideIndia.com

MARCH - 2011 - AI

**7451**

Register Number

# தமிழ்

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) பழனம் ஆ) மல்லல்

இ) வற்கடம் ஈ) பாத்தி

உ) அகிம்சை ஊ) மாசு

எ) திறல் ஏ) பாராதி.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) அறிவு + இலார் ஆ) நாள் + குறிப்பு.

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) பெருந்துறை ஆ) உடைந்தழும்.

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) ஓயாமல்

ஆ) நெடுநேரம்

இ) இன்ப துன்பம்.

5. எவையேனும் **இரண்டினைப்** பிழை திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) நானும் அவனும் வந்தேன்

ஆ) அம்மா உணவு சமைக்கிறது

இ) தென்றல் மெல்ல வீசின.

6. வினைப் பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) பாடினார் ஆ) தொழுவோர்.

7. தொழிற் பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) பழகு ஆ) இடி.

8. பொது மக்கள் வரிப்பணத்தைச் செலுத்தினர்.

( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. பொய் சொல்வதற்கு மனவலிமை வேண்டுமன்றோ ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

www.StudyGuideIndia.com

10. ஒழுக்கத்தைப் பின்பற்றாவிட்டால் வாழ்வில் உயர முடியாது.

( உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக ) 2

11. பறவை கூடு கட்டுகின்றது. இரை தேடுகின்றது.

( இறந்தகால வாக்கியமாக மாற்றுக ) 2

12. நிலத்தை உழுவதற்கு மாடு வேண்டும். விளைந்த கதிரைக் களத்தில் பிணையலிட்டு அடிப்பதற்கு மாடு வேண்டும்.

( ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக ) 2

13. எவையேனும் **இரண்டனுக்கு** உறுப்பிலக்கணம் தருக : 2 × 1 = 2

அ) உரைத்தார் ஆ) கொள்வோம்

இ) படிந்து ஈ) உறைந்த.

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக : 3

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்

மாண்பயன் எய்தல் அரிது.

15. எவையேனும் **நான்கு** சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக : 4 × 1 = 4

அ) நிரம்பிய ஆ) உலாவுதல்

இ) நெடுநீர் ஈ) அழுது

உ) பாய் இருள் ஊ) இராப் பகல்.

16. எவையேனும் **ஆறு** இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க : 6 × 2 = 12

அ) வேற்றுமை அணியினைச் சான்றுடன் விளக்குக.

ஆ) சீர்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

இ) பல, சில என்னும் சொற்கள் தம்முன் தாம்வரின் எவ்வாறு புணரும் ?

ஈ) பெரும் பொழுதுகள் எத்தனை ? அவை யாவை ?

உ) பதம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

ஊ) ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்துக.

எ) காலம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

ஏ) குற்றியலுகரம் என்றால் என்ன ? சான்று தருக.

17. அடி பிறழாமல் எழுதுக :

அ) 'சீராரும் ...' எனத் தொடங்கும் பாடல். 4

ஆ) 'உலகம் ...' எனத் தொடங்கும் பாடல். 4

இ) 'நவில் தொறும் ...' எனத் தொடங்கும் திருக்குறள். 2

www.StudyGuideIndia.com

18. எவையேனும் இரண்டு செய்யுட்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : 2 × 2 = 4

அ) 'அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக்கண்டு, ஏங்கி
மல்லல் மதுரையார் எல்லாருந் தாம் மயங்கி'

ஆ) நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.

இ) சீர்மிகுந்த கதிர்நாட்டின் மேலே அந்தத்
திறல் மிகுந்த வேழநாட்டுப் படைகள்
போர்தொடுக்கப் பாய்ந்தனவாம் கடலைப் போலே
பொன்னொளியைப் பாய்ச்சுகின்ற தேர்ப்படைகள்.

19. கீழ்வரும் பாடலின் பொருள் தெளிந்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி. 4 × 1 = 4

'கூழையே நீ குடித்தாலும்
குளித்த பிறகு குடி அப்பா
ஏழையே நீ ஆனாலும்
இரவில் நன்றாய் உறங்கப்பா
தூய காற்றும் நன்னீரும்
சுண்டப் பசித்த பின் உணவும்
நோயை ஓட்டி விடும் அப்பா
நூறு வயதும் தரும் அப்பா.

வினாக்கள் :

அ) கூழை எவ்வாறு குடிக்க வேண்டும் ?

ஆ) ஏழை இரவில் என்ன செய்ய வேண்டும் ?

இ) நோயை ஓட்டுபவை யாவை ?

ஈ) நமக்கு எவ்வளவு வயது தரும் ?

20. ஏதேனும் ஒன்றினை இடஞ்சுட்டி விளக்குக : 1 × 3 = 3

அ) "அவர் இங்கே வரும்போது எத்தனை எருமை மாடுகள் கொண்டு வருவார்"

1. யார் இங்ஙனம் கேட்டார் ?
2. யாரிடம் கேட்டார் ?
3. 'அவர்' என்பது யாரைக் குறிக்கும் சொல் ?

*அல்லது*

ஆ) "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்"

1. இவ்வடி யாரால் கூறப்பட்டது ?
2. யாரிடம் கூறப்பட்டது ?
3. மேற்கூறிய அடி எந்த இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டது ?

[ Turn over

www.StudyGuideIndia.com

21. எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க. 6 × 2 = 12

அ) மூவேந்தர்கள் என்பவர் யார் ? அவர்கள் செய்த சதி யாது ?

ஆ) நாம் செய்ய வேண்டிய சமுதாயப் பணி யாது ?

இ) 'ஒட்டகமண்டு' - குறிப்பு வரைக.

ஈ) சமுதாய முன்னேற்றப் பணிகளில் கணிப்பொறியின் பங்கு யாது ?

உ) நம் முன்னோர்கள் கண்ட உண்மை யாது ?

ஊ) நம் வாழ்க்கையில் உள்ள மூன்று கூறுகள் யாவை ?

எ) உண்மையான அழகுடையவர் என்று எவரைச் சொல்லலாம் ?

ஏ) 'அறிவியல் நோக்கு' என்றால் என்ன ?

22. ஏதேனும் **ஒன்றனுக்கு** விரிவான விடையளி. 7

அ) நாம் ஆற்ற வேண்டிய கடமை யாது ?

ஆ) 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் கருத்தினை அறிஞர் அண்ணா வழி நின்று விளக்குக.

இ) கணிப்பொறி நம் வாழ்வில் இன்றியமையாதது என்பதனை விளக்குக.

23. ஏதேனும் **ஒரு** தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) காலத்தின் அருமை

ஆ) செய்தித் தாள்

இ) ஒழுக்கம் விழுப்பந் தரும்.

24. ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் நும் பெயர், பதிவெண் மற்றும் முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) உன் பிறந்தநாள் விழாவிற்கு நண்பனை வருமாறு அழைத்து ஒரு கடிதம் வரைக.

*அல்லது*

ஆ) உன் தெருவில் மின் விளக்குகள் எரியாமல் இருப்பதை அறிவித்து மின்சாரத்துறை உதவிப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக.

*அல்லது*

இ) சுற்றுலா செல்ல அனுமதி வேண்டி உன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதுக.

25. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு மொழியாக்கம் தருக : 1 + 1 + 2

அ) Face is the index of the mind

ஆ) No smoke without fire

இ) Floods are caused by heavy rains. Without rain man cannot live on this earth. Water is necessary for drinking, bathing, washing, cooking and so many other domestic purposes.

www.StudyGuideIndia.com